**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 48/2020**

**வா.சா.2 – மூர்த்தி** **17.09.2025**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இதே வழக்கு சொத்து சம்மந்தமாக மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்ற அ.வ.எண்.95/2015 என்ற வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் 4ம் வாதி முத்தையா எனது நண்பர். முத்தையா கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் அந்த வழக்கிலும் சாட்சியம் அளித்தேன் இந்த வழக்கிலும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 143/4 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 முதல் 4 ஏக்கர் இருக்கும். தாவா சொத்திற்கு கிழக்கே அரசு நிலம் உள்ளது. தாவா சொத்தின் தெற்கே கண்மாய் உள்ளது. தாவா சொத்தின் மேற்கே முத்தையா நிலம் உள்ளது அதன் சர்வே நம்பர் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் வடக்கே யார் நிலம் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து கண்ணப்பனுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு நான் ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. கண்ணப்பன் வாரிசுகளுக்கிடையே எந்த வருடம் பாகம் நடந்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு பெரியாம்பிள்ளை பெயரில் பட்டா பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. சிலம்பன் எனது தாத்தா என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. சிலம்பனுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பாலு அம்பலம் எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று நேரடியாக தெரியுமா என்றால்

தெரியாது எனது அப்பா சொல்லி தெரியும். எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று தெரியாது. பாலுஅம்பலம் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 143/4 தற்போது 1ம் பிரதிவாதி ராமமூர்த்தி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு முன்பு ராமசாமி பெயரில் பட்டா இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி ராமமூர்த்தி 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்று தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். ராமமூர்த்தி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று முந்தைய வழக்கிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராமமூர்த்தி தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு 2ம் பிரதிவாதி ராமசாமி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். சர்வே எண் 143/4 சொத்தில் கண்ணப்பன் வகையறாவிற்கு எந்தவித பாத்தியமும் அனுபவமும் எந்த காலத்திலும் கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண் 143/4 சொத்தை கிரையம் கொடுக்க கண்ணப்பன் வகையறாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எந்த காலத்திலும் பாலுஅம்பலம் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் எனது நண்பரான 4வது வாதி

கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை